இறைச்சி முயல் வளர்க்க நாளை இலவசப் பயிற்சி

First Published : 28 Mar 2011 01:27:03 PM IST

கரூர், மார்ச் 27: இறைச்சிக்கான முயல் வளர்ப்பு பயிற்சி வகுப்பு பண்டுதகாரன்புதூரில் செவ்வாய்க்கிழமை (மார்ச் 29) நடைபெறுகிறது.

கரூர் அருகேயுள்ள பண்டுதகாரன்புதூரில் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி, ஆராய்ச்சி மையம் அமைந்துள்ளது. இங்கு ஒரு நாள் பயிற்சி முகாமாக இறைச்சிக்கான முயல் வளர்ப்பு பயிற்சி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பயிற்சியில் இறைச்சிக்கான முயல் வளர்ப்பு, பண்ணை வீட்டமைப்பு, தீவன மேலாண்மை, நோய்கள், அவற்றைத் தடுக்கும் முறைகள், விற்பனை உத்திகள், பண்ணைப் பொருளாதாரம் குறித்த தலைப்புகளில் விளக்கப்படுகிறது.

பங்கேற்க விரும்புவோர் 04324-294335 என்ற எண்ணில் முன்பதிவு செய்து கொண்டு முகாமில் பங்கேற்கலாம் என மையத்தின் இணைப் பேராசிரியரும், தலைவருமான க. செந்தில்வேல் கேட்டுக் கொண்டுள்ளார்.

அறுவடை நேர்த்தி முறைகளை கையாண்டு உளுந்து பயிரில் லாபம் பெற யோசனை

பதிவு செய்த நாள் : மார்ச் 29,2011,00:32 IST

சிதம்பரம் : உளுந்து பயிர் அறுவடை பின் நேர்த்தி முறைகளை கையாண்டு லாபம் பெற வேண்டும் என விவசாயிகளுக்கு வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது.இதுகுறித்து வேளாண் துணை இயக்குனர் (வணிகம்) தனவேல், சிதம்பரம் கோட்ட வேளாண் அலுவலர் சித்ரா ஆகியோர்

வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:சிதம்பரம் கோட்டம் புவனகிரி, பரங்கிப்பேட்டை, கீரப்பாளையம், குமராட்சி, காட்டுமன்னார்கோவில் வட்டாரங்களில் உளுந்து பாசிப்பயறு, துவரை மற்றும் தட்டைப்பயறு ஆகிய பயறு வகைகளின் கூடுதல் வருமானம் பருப்பு சதவீதத்தைப் பொறுத்தே அமைகிறது.பயறு வகைகள் 85 சதவீதம் பருப்பு அளவும், கூடுதல் விலையும் பெற்றிட பயறு வகைகளின் காய்கள் நெற்றுகளாக மாறியும் இலைகள் பழுத்து உதிர ஆரம்பிக்கும் நிலையில் அறுவடை செய்ய வேண்டும். நெற்றுகள் காப்பிக்கொட்டை நிறமாக இருந்தால் நெற்றுக்களை பிரித்து எடுக்க வேண்டும்.

செடியில் இருந்து பிரித்து எடுக்கப்பட்ட நெற்றுக்களை காய வைத்து விதைகளை பிரித்து எடுத்து சுத்தம் செய்ய வேண்டும். பிரித்து எடுத்த விதைகளில் கலந்துள்ள கல், மண், தூசு, சருகுகள், முதிராத விதைகள், பூச்சி நோய் தாக்கிய விதைகள், உடைந்த விதைகள் போன்றவற்றை தனியாக நீக்கி விதைகளின் ஈரப்பதம் 12 சதவீதத்திற்குள் இருக்குமாறு காய வைக்க வேண்டும். உணவிற்கு நீண்ட நாட்கள் சேமிக்க விதைகளை வெயிலில் காய வைத்து பின் ஒரு கிலோ விதைக்கு 5 மில்லி நல்லெண்ணைய் தடவி நிழலில் உலர வைக்க வேண்டும், துவரை விதையை செம்மண் தடவி காய வைத்து சேமிக்க வேண்டும்.பயறு வகைகளில் விதைகள் "ஸ்பெஷல்' " நல்லது' " சுமார்' மற்றும் சாதாரணம் என நான்கு தரங்களாக ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் உள்ள வணிக முறை தரம் பிரிப்பு மையங்களில் தரம் பிரிக்கப்படுகிறது. எனவே விவசாயிகள் மேற்கூறிய தொழில் நுட்பங்களை பின்பற்றி பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.இவ்வாறு செய்திகுறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**முட்டைக்கோழி விலை உயர்வு பண்ணையாளர்கள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மார்ச் 29,2011,01:49 IST

நாமக்கல்: நாமக்கல் மண்டலத்துக்கு உட்பட்ட பகுதியில், 800க்கும் அதிகமான கோழிப்பண்ணைகள் உள்ளன. அதன்மூலம், நாளொன்றுக்கு மூன்று கோடி முட்டைகள் வீதம் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் முட்டைகள், கேரளா மற்றும் வெளிநாடுகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.
தவிர, சத்துணவுத் திட்டம், உள்ளூரிலும் விற்பனை செய்யப்படுகிறது. முட்டை உற்பத்தியில் ஈடுபடும் கோழிகள் 72வது வாரத்துக்கு பின், இறைச்சிக்கு அனுப்பப்படுகிறது. குறிப்பாக, லட்சக்கணக்கான முட்டைக்கோழிகள் கேரளா மாநிலத்துக்கு இறைச்சிக்கு அனுப்பப்படுகிறது. சில மாதங்களாக முட்டைக் கோழிகள் விலை குறைந்து காணப்பட்டது.

தற்போது, அவற்றின் விலை ஏற்றம் கண்டு 40 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. கறிக்கோழி விலை ஏற்றம் காரணமாக முட்டைக்கோழி விலையும் ஏற்றமடைந்துள்ளது. "முட்டைக் கோழி தேவை மிகுதியாலும், அதன் விலை ஏற்றமடைந்தது' என, பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். பல மாதங்களுக்கு பின், முட்டைக்கோழி விலை ஏற்றம் கண்டிருப்பது கோழிப்பண்ணையாளர் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**கொப்பரை உற்பத்தி பாதிப்பு :சுட்டெரிக்கும் சூரியன்; தொழிலாளர்கள் "மட்டம்'**

பதிவு செய்த நாள் : மார்ச் 29,2011,01:20 IST

பல்லடம் : கடும் வெயில் காரணமாக, கொப்பரை உற்பத்தி களத்துக்கு வேலைக்கு வர தொழிலாளர்கள் ஆர்வம் காட்டுவதில்லை. இதன் காரணமாக, கொப்பரை உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.பல்லடம், சுல்தான்பேட்டை வட்டாரங்களில் கொப்பரை உற்பத்தி முக்கிய தொழிலாக உள்ளது. இங்கு 200க்கும் மேற்பட்ட கொப்பரை உற்பத்தி களங்கள் உள்ளன. தினமும் ரூ.50 லட்சம் மதிப்புள்ள கொப்பரைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.களங்களில் உடைத்து காயப்போடும் தேங்காய்கள் ஏழு நாளில் கொப்பரையாக மாறுகின்றன.

உற்பத்தி செய்யப்படும் கொப்பரைகள், பல்லடம், செஞ்சேரிமலையில் உள்ள அரசு கொப்பரை கொள்முதல் மையங்கள் மற்றும் காங்கயம், வெள்ளகோவில் பகுதிகளில் உள்ள தேங்காய் எண்ணெய் மில்களில் கொப்பரை உற்பத்தி விவசாயிகளால் விற்கப்படுகின்றன.பல்லடம், சுல்தான் பேட்டை வட்டாரங் களில் கடந்த இரு வாரங்களாக அடித்து வரும் கடும் வெயில் காரணமாக, கொப்பரை களத்தில் தேங்காய் உடைத்து காயப்போடும் பணிக்கு தொழிலாளர்கள் போதிய ஆர்வம் காட் டாமல் அடிக்கடி வேலைக்கு "மட்டம்' போடத்துவங்கியுள்ளனர். பல்லடம் பகுதியில் கொப்பரை உற்பத்தி மந்தம் அடையத் துவங்கியுள்ளது. சில நாட்களாக சராசரியாக தினமும் ரூ.10 லட்சம் மதிப்புள்ள கொப்பரை உற்பத்தி பாதிக்கப்பட்டுவருகிறது.

வெளிமார்க்கெட்டில் ஒரு கிலோ கொப்பரைக்கு ரூ.52க்கு மேல் கொள்முதல் விலை கிடைத்து வருகிறது. ஆனால், கொப்பரை உற்பத்தி தொழிலுக்கு தொழிலாளர்கள் மட்டம் போடு வதால், பல்லடம் பகுதியில் கொப்பரை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கடும் வேதனை அடைந்துள்ளனர். சில களங்களில் தொழிலாளர்கள் அமர்ந்து தேங்காய்களை உடைக்க ஏதுவாக சிறிய தடுக்குகளால் (ஓலை) நிழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**சுருளி அருவியில் கட்டுப்பாடு வனத்துறை நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : மார்ச் 28,2011,23:39 IST

கம்பம் : வனவிலங்கு சரணாலயமாக மாற்றப்பட்டதால், சுருளி அருவியில் சுற்றுலா பயணிகளுக்கு வனத்துறை கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. வனவிலங்குகள் பாதுகாப்பில், மத்திய வன அமைச்சகம் கவனம் செலுத்தி வருகிறது. மாநில வனத்துறை அதிகாரிகளின் பரிந்துரையை ஏற்று, பல பகுதிகளை வனவிலங்கு சரணாலயங்களாக மாற்ற அனுமதி வழங்கியுள்ளது. தேனி மாவட்டத்தில் குமுளியில் இருந்து கூடலூர், கம்பம், உத்தமபாளையம், சின்னமனூர் மற்றும் ஹைவேவிஸ், மேகமலை பகுதிகளில் ரோட்டிற்கு கீழ் பக்கம் உள்ள வனப்பகுதிகளை வனவிலங்கு சரணாலயங்களாக மாற்ற பரிந்துரை செய்யப்பட்டது.

அதை மத்திய அரசும் ஏற்று வனவிலங்கு சரணாலயமாக மாற்றி உத்தரவிட்டுள்ளது. கம்பம் வனச்சரகத்திற்கு உட்பட்ட பல பகுதிகள் வனவிலங்கு சரணாலயமாக மாற்றப்பட்டுள்ளதால், சுருளி அருவி பகுதியில் வனத்துறையினர் கட்டுப்பாடுகளை விதிக்க துவங்கியுள்ளனர்.

சுருளிக்குள் வாகனங்கள் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. வாகனங்களை டோல்கேட் அருகே நிறுத்த வேண்டும் என கூறியுள்ளது. பிளாஸ்டிக், பாலிதீன் பொருட்களை சுற்றுலாப்பயணிகள் அருவி பகுதியில் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. அருவி பகுதியில் சமையல் செய்வது, பந்தி போடுவது போன்றவற்றை தடை செய்யவும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக வனத்துறை அதிகாரிகள் கூறுகையில், "" சுருளி மாசுபடுவதால் வனவிலங்குகள் நடமாட்டம் குறைந்து வருகிறது. எனவேதான் சில கட்டுப்பாடுகளை விதித்து வருகிறோம். வனவிலங்குகளை பாதுகாக்கவும், சமூகவிரோதிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும்,சுற்றுலா பயணிகள் மற்றும் பக்தர்கள் உதவ வேண்டும்' என்றனர்.

**மாங்காய் விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மார்ச் 28,2011,23:28 IST

ஸ்ரீவில்லிபுத்தூர் : ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் கடந்த இரு நாட்களுக்கு முன் அடித்த சூறாவளிக்காற்றால் மாமரங்களில் இருந்த மாங்காய்கள் உதிர்ந்தன. இந்நிலையில் மார்க்கெட்டிற்கு மாங்காய் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் தோப்புகளில் கடந்த வாரம் 12 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்பட்ட மாங்காய் தற்போது 5 ரூபாய்க்கு வியாபாரிகள் வாங்குவதால் விவசாயிகள் கவலை அடைத்துள்ளனர்.

தினகரன்

## ஆத்தூர் கூட்டுறவு சங்கத்தில் 22,200 மூட்டை பருத்தி ரூ.4.5 கோடிக்கு விற்பனை

பதிவு செய்த நாள் 3/29/2011 2:19:41 AM



சேலம் : சேலம் மாவட்டம், ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமை பருத்தி ஏலம் நடக்கும். அதில் ஆத்தூர், தம்மம்பட்டி, கெங்கவல்லி, பெரம்பலூர், விழுப்புரம், சின்னசேலம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை உள்ளிட்ட பகுதியை சேர்ந்த விவசாயிகள், பருத்தியை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.

இவற்றை சேலம், பெள்ளாச்சி, கோவை, ராஜபாளையம், கும்பகோணம் பகுதிகளை சேர்ந்த பருத்தி ஆலைகளின் நிர்வாகிகள் ஏலம் எடுத்து செல்கின்றனர். இந்த ஞாயிறன்று நடந்த பருத்தி ஏலத்தில் மொத்தம் 22 ஆயிரத்து 200 மூட்டைகளை விவசாயிகள் கொண்டு வந்தனர். மொத்தம் ஸி 4.5 கோடிக்கு பருத்தி விற்பனையானது.
அதேபோல மஞ்சள் 1,600 மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இவை ஸி 58 லட்சத்துக்கு விற்பனையானது.

## முட்டை விலை 10 காசு உயர்வு

பதிவு செய்த நாள் 3/29/2011 2:18:46 AM



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 10 காசுகள் உயர்த்தப்பட்டு, 220 காசுகளாக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் பண்ணையாளர், வியாபாரிகள் கலந்து கொண்டனர். நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலையை உயர்த்த முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து, முட்டை விலையில் 10 காசுகள் உயர்த்தப்பட்டு ஒரு முட்டை விலை 220 காசுகளாக விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

ஒரு கிலோ முட்டை கோழி விலையில் ரூ.4 உயர்த்தப்பட்டு, ரூ.40 ஆகவும், கறிகோழி ஒரு கிலோ ஸி75 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. பிற மண்டலங்களில் நேற்று நிர்ணயம் செய்யப்பட்ட முட்டை விலை விவரம்: சென்னை & 223, மைசூர் & 210, பெங்களூரு & 205, ஹைதராபாத் & 196, மும்பை & 221, விஜயவாடா & 195, கொல்கத்தா & 240, பர்வாலா & 192, டெல்லி & 201.

## வேளாண் கூட்டுறவு சங்கத்தில் ரூ.4.50 கோடிக்கு பருத்தி ஏலம்

பதிவு செய்த நாள் 3/29/2011 2:38:42 AM



ஆத்தூர் : சேலம் மாவட்டம் ஆத்தூரில் நடந்த பருத்தி ஏலத்தில் ஒரே நாளில் ரூ.4.50 கோடிக்கு பருத்தி விற்பனை செய்யப்பட்டது. சேலம் மாவட்டம் ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமை பருத்தி ஏலம் நடக்கிறது. இதில் ஆத்தூர், தம்மம்பட்டி, கெங்கவல்லி, பெரம்பலூர், விழுப்புரம், சின்னசேலம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை உள்ளிட்ட பகுதியை சேர்ந்த விவசாயிகள், பருத்தியை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். நேற்று முன்தினம் நடந்த பருத்தி ஏலத்தில் மொத்தம் 22,200 மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். மொத்தம் ரூ.4.50 கோடிக்கு பருத்தி விற்பனையானது.